# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை.

# க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2019

# புள்ளியிடும் திட்டம்

# நாடகமும் அரங்கியலும் 58.

# புதிய பாடத்திட்டம்

நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது
வினாப்பத்திரம் -I, வினாப்பத்திரம் -II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது.
பகுதி I 40 பல்தேர்வு வினாக்களையும் பகுதி II 06 வினாக்களையும் கொண்டுள்ளது.
பகுதி I 40 வினாக்களும் கட்டாய வினாக்களாகும்.
ஒவ்வொரு வினாக்களுக்கும் 5 விடைகள் காணப்படும்.
அவற்றுள் சரியான ஒரு விடையைத் தெரிவு செய்து இலக்கத்தை அடைப்புக் குறியினுள் இட வேண்டும்.

**வினாப்பத்திரம் -I**

பகுதி - I 40 பல்தேர்வு வினாக்களுக்கும் **40 புள்ளிகள்**

பகுதி - II 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

**வினாப்பத்திரம் - II**

பகுதி - 1 40 பல்தேர்வு வினாக்களுக்கும் 40 புள்ளிகள்

பகுதி - 11 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்
பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

## வினாப்பத்திரம் - I

| | |
|---|---|
| பகுதி - I பல்தேர்வு வினாக்கள் | 40 புள்ளிகள். |
| பகுதி - II | |
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

# வினாப்பத்திரம் - II

பகுதி - I பல்தேர்வு வினாக்கள் 40 புள்ளிகள்.

பகுதி - II

| | |
|---|---|
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

இறுதிப்புள்ளி

| | |
|---|---|
| வினாப்பத்திரம் -1 | 100 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் -11 | 100 புள்ளிகள் |

இரு வினாப்பத்திரங்களின் புள்ளிகளையும் கூட்டி இரண்டால் வகுத்துப் பெறப்படும் புள்ளிகள் இறுதிப் புள்ளிகளாகும். 200/2 = 100 புள்ளிகள்

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................ ✓ $\frac{4}{5}$
............................................................................
............................................................................

(ii) ............................................................................ ✓ $\frac{3}{5}$
............................................................................
............................................................................

(iii) ............................................................................ ✓ $\frac{3}{5}$
............................................................................
............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

16.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

✳ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
✳ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

✳ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
✳ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** "மனிதனது உள்ளத்தைத் தன்வசமாக்கி நிரப்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றலே கலை" எனக் குறிப்பிட்டவர்
(1) இராமதாஸ் முகர்ஜி
(2) மா. இராசமாணிக்கனார்
(3) பொ. மீனாட்சிசுந்தரனார்
(4) ரவீந்திரநாத் தாகூர்
(5) அரவிந்தர் (......)

**2.** மேல்வருவனவற்றுள் மேலைத்தேய கோட்பாட்டாளரான 'எரிக் நியூட்டன்' கலை பற்றி முன்வைத்த கருத்து யாது?
(1) "புலக்காட்சிப் பொருளே கலையாகும்."
(2) "தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலையாகும்."
(3) "மனித உணர்வுகளின் வெளிப்பாடே கலையாகும்."
(4) "தான் பெறுகின்ற அனுபவத்தை பிறரும் அனுபவிக்கச் செய்வதே கலையாகும்."
(5) "முனைப்புப் பெறுகின்ற அனுபவத்தை பிறரும் அனுபவிக்கச் செய்வதே கலையாகும்." (......)

**3.** மேல்வருவனவற்றுள் நாடக எழுத்துரு பற்றிய **தவறான** கூற்று யாது?
(1) அது வார்த்தைகளின் கலையன்று, வார்த்தைகளைப் பயன்படுத்தும் கலையாகும்.
(2) நாவல், சிறுகதையை விட தகவல்களைக் கூடுதலாகக் கொண்டிருக்கும்.
(3) பெரும்பாலும் நடிப்பதற்காக மட்டுமே எழுதப்படும்.
(4) ஆசிரியரிடமிருந்து பார்ப்போருடன் நபர்கள் மூலமாகப் பேசும்.
(5) கரு, கதைப்பின்னல், மோதுகை என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். (......)

**4.** நாடகத்துடன் தொடர்புடைய மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ. நெறியாளரைத் தெரிவுசெய்தல்
ஆ. பாத்திரத்தைத் தெரிவுசெய்தல்
இ. விளம்பரம் செய்தல்
ஈ. ஒத்திகை பார்த்தல்
உ. நாடக எழுத்துருவைத் தெரிவுசெய்தல்
இவற்றுள் நாடக தயாரிப்பாளருடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
(1) அ, ஆ, இ (2) ஆ, இ, ஈ (3) இ, ஈ, உ (4) அ, இ, உ (5) ஆ, ஈ, உ (……)

**5.** மேல்வருவனவற்றுள் கிரேக்க நாடகாசிரியர் மெனாண்டரின் நாடகங்களின் இயல்பு யாது?
(1) ஆழமான கேலி, கிண்டல் அற்றவை.
(2) மிருகபட்சி வேட முகங்கள் அணியப்பட்டிருக்கும்.
(3) விசித்திரம், முரட்டுத்தனம், கொச்சைத்தனம் கொண்ட செம்மைத்தன்மை அற்றவை.
(4) அரசியல்வாதிகளையும் அரசியற் கொள்கைகளையும் கிண்டல் செய்யும்.
(5) சமகால மக்களின் குற்றங்களைக் கடிந்து முன்னோர் வாழ்வியலைப் பேணுவதாய் அமையும். (……)

**6.** கிரேக்க திறஜெடி நாடகக் கட்டமைப்பில் 'பரடெஸ்' (Parados) எனப்படுவது என்ன?
(1) நாடகத்தை அறிமுகம் செய்தல் (2) முதன்முதலில் ஆடுகளத்தினுள் புகுதல்
(3) சம்பவங்கள் காட்சிகளாக நிகழ்த்தப்படல் (4) கூட்டு பக்திப்பாடல் நிகழ்த்தப்படல்
(5) இசைப்பா முகாரி எழுப்புதல் (……)

**7.** நாடக அரங்கக் கல்லூரியினர் தமது படைப்பான 'எந்தையும் தாயும்' நாடகத்தை முதன்முதலில் நிகழ்த்திய இடம் எது?
(1) படச்சட்ட அரங்கு (2) திறந்த வெளி (3) நாற்சார் அரங்கு
(4) வட்டக்களரி (5) தெருவெளிகள் (……)

**8.** உடல், அங்கங்கள், சைகைகள், அசைவுகளுடனும் ஒளி, உடை, இசை, ஒப்பனை போன்ற துணைக் கலைகளுடனும் கூடிய நடிப்பு நுட்பம்
(1) ஊமம் எனப்படும். (2) போலச்செய்தல் எனப்படும்.
(3) வகிபாகம் ஆடுதல் எனப்படும். (4) புதிதளித்தல் எனப்படும்.
(5) மறுதலைப்பாகமாடுதல் எனப்படும். (……)

**9.** "புனிதத்தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பு சடங்காகும்" எனக் குறிப்பிட்டவர்
(1) பக்தவத்சலபாரதி (2) ஜோன் ஹரீசன் (3) ஜே.ஜே. தொம்சன்
(4) றிட்ஜ்வே (5) கா. சிவத்தம்பி (……)

**10.** மேல்வருவனவற்றுள் "சடங்குகள் மனித வாழ்வைப் பண்படுத்துகின்றன" எனும் கூற்றிற்குப் **பொருந்தாத** விடயம் எது?
(1) சமூகப் பிணைப்பை வலுப்படுத்துதல்
(2) சமூகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல்
(3) மனிதனின் தகுதி, தகுதியின்மையை வெளிப்படுத்துதல்
(4) வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல்
(5) செய்பவருக்கு உணர்வுபூர்வமான திருப்தியை ஏற்படுத்துதல் (……)

**11.** ஐரோப்பிய அரங்கில் சூழலியல் அரங்கைத் தோற்றுவித்தவர்
(1) குறொட்டொவ்ஸ்கி (2) பீற்றர் புறூக் (3) அகஸ்தா போல்
(4) றிச்சட் செக்னர் (5) அன்ரனி ஆர்த்தோ (……)

**12.** தமிழக அரங்க வரலாற்றில் சங்க காலத்தில் ஆடலில் சிறப்புற்றுத் திகழ்ந்தவள்
(1) விறலி (2) மாதவி (3) மாதரி
(4) பதியிலார் (5) சதுரிமாணிக்கம் (……)

**13.** மேல்வருவனவற்றுள் வடபாங்கு தொடர்பில் **பிழையான** கூற்று எது?
(1) யாழ்ப்பாணத்திலிருந்து சென்றது.
(2) கதை புலசந்தோரால் மாத்திரம் சொல்லப்படும்.
(3) பாடல்கள் வல்லோசையுடையனவாகக் காணப்படும்.
(4) கடவுள் வாழ்த்து விருத்தத்தில் அமையும்.
(5) அரச பாத்திரம் செங்கோலுடன் வரும். (......)

**14.** சோபோகிளிஸ் எழுதிய அவலச்சுவை நாடகங்களுள் மிகச் சிறந்த நாடகம் எனக் கருதப்படுவது
(1) அன்ரிகனி (2) ஈடிப்பஸ் மன்னன்
(3) ஈடிப்பஸ் அந்கொலோன்ஸ் (4) எலக்ரா
(5) அஜாக்ஸ் (......)

**15.** இசை நாடகங்களில் உணர்வுகள், செயற்பாடுகள் என்பன பாடலின் ஊடாகவே வெளிப்படும் என்பர். சத்தியவான் சாவித்திரியில் வரும் "ஆஹா சத்தியவான் என்பது நான்தானே......" எனும் பாடல் குறிப்பது,
(1) கடவுளை வேண்டுதலையாகும். (2) மகிழ்தலையாகும்.
(3) தர்க்கித்தலையாகும். (4) பாத்திரத்தை வர்ணித்தலையாகும்.
(5) காட்சியை வர்ணித்தலையாகும். (......)

**16.** தொலைக்காட்சி நாடகத்தின் சிறப்பியல்பாய் அமைவது
(1) கலையகம் பிரதானமானதாக இருத்தல் (2) மனம் எனும் அரங்கில் நிகழல்
(3) தொடர் நாடகங்களாக இருத்தல் (4) கேட்டலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படல்
(5) யதார்த்தமானதாக இருத்தல் (......)

**17.** ஈடிப்பஸ் நாடகத்தின் 'மோதுகை' எனக் கொள்ளப்படுவது
(1) விதியின் கையில் ஆட்டுவிக்கும் அவலம்
(2) அவலநாயகனின் மனித நிலைப்பட்ட துன்பம்
(3) தனிமனிதனுக்கும் இறை நியதிக்கும் இடையிலான போராட்டம்
(4) ஈடிப்பசுக்கும் தந்தைக்கும் இடையிலான போராட்டம்
(5) உயர்பீடத்தில் இருப்பவர் அழிக்கப்படுதல் (......)

**18.** நாடகமொன்றின் வகைப்பாட்டை வெளிப்படுத்துவது
(1) கரு (2) மோதுகை (3) கதைப்பின்னல்
(4) மோடி (5) பாத்திரங்கள் (......)

**19.** இராவணேசன் நாடகத்தில் தொடக்கத்திலேயே இரண்டு பாத்திரங்களுக்கிடையேயான முரண் ஆரம்பிக்கின்றது. அப்பாத்திரங்கள் இரண்டும் யாவை?
(1) இராவணன் - சீதை (2) இராவணன் - மண்டோதரி (3) இந்திரஜித் - இலக்குவன்
(4) இராவணன் - தூதன் (5) கும்பகர்ணன் - இராமன் (......)

**20.** 'கோடை' நாடகத்தில் வரும் மேல்வரும் உரையாடல் பகுதியைக் கருதுக.

A : ஆயிரங்கால் மண்டபம் அக்காலத்திருந்தனவாம்.
எங்களது கோயிலுக்கோ!

B : எட்டுத் தூண்.

A : எட்டுக்கும் சாந்தேதும் பூசி சரிக்கட்ட காலமில்லை.

இவ்வுரையாடலில் இடம்பெறும் A, B ஆகிய பாத்திரங்கள் முறையே யாவை?
(1) மாணிக்கம், சோமு (2) மாணிக்கம், செல்வம் (3) பஞ்சையர், மாணிக்கம்
(4) சோமு, கமலி (5) பஞ்சையர், சோமு (......)

**21.** உணர்ச்சிகள் உடலில் வெளிப்படுவதை 'மெய்ப்பாடு' எனக் குறிப்பிட்ட நூல்
(1) கலித்தொகை (2) சிலப்பதிகாரம் (3) தொல்காப்பியம்
(4) பரத சாஸ்திரம் (5) கவிதையியல் (......)

**22.** மேல்வருவனவற்றுள் மேடை முகாமையாளரின் பணி எது?
(1) ஒத்திகைகளை மேற்கொள்ளல்
(2) தயாரிப்புச் செயன்முறைகளில் ஈடுபடுதல்
(3) நினைவூட்டச் செயற்பாடுகளில் (promting) ஈடுபடுதல்
(4) காட்சிகளை ஒழுங்குபடுத்துதல்
(5) சக பார்ப்போராகச் செயற்படுதல் (……)

**23.** பார்ப்போரை 'சகிர்தயர்' என அழைக்கும் நாடக மரபு யாது?
(1) கிரேக்க மரபு (2) ரோம மரபு (3) யப்பானிய மரபு
(4) இந்திய மரபு (5) சீன மரபு (……)

**24.** "பார்ப்போர் என்பவர் வெறும் பார்ப்போராக இருக்காது செயன்முனைப்புள்ள பங்குகொள்பவராக மாறவேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) அரிஸ்டோட்டல் (2) பரதமுனிவர் (3) அகஸ்தா போல்
(4) போட்டோல்ட் பிறெ.்ட் (5) பின்ரர் (……)

**25.** "நாடகத்தின் கருப்பொருள் விஞ்ஞானபூர்வமான கண்டுபிடிப்புக்களிலிருந்து எடுக்கப்பட்டதாகவும், உண்மையான வாழ்வில் அவதானிக்கப்பட்டவையாகவும் இருக்கவேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) ஒஸ்கார் புரொக்கற் (2) கோணேல் (3) ரசீன்
(4) எமிலி சோலா (5) றிச்சர்ட் சதண் (……)

**26.** மேல்வருவனவற்றுள் ஸ்ரனிஸ்லவ்ஸ்கி முன்வைத்த நுட்பமுறைகள் **அல்லாத** விடயங்கள் யாவை?
(1) கற்பனைப் பாவனை நிலை, தரப்படும் சூழல்
(2) கற்பனை செய்தல், தளர்வுநிலை
(3) தசைகளின் தளர்நிலை, தொடர்புகொள்ளல்
(4) உணர்வுபூர்வமான விசுவாசம், உணர்ச்சி வெளிப்பாடு
(5) உணர்வுபூர்வமான ஞாபகங்கள், தளர்வுநிலை (……)

**27.** குறொட்டொவ்ஸ்கியின் வறுமை அரங்கின் முக்கியமான பண்பு யாது?
(1) நடிகரின் உடலுக்கும் மூளைக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்
(2) பார்ப்போரும் பங்குபற்றும் முறையும் முக்கிய இடம் வகித்தல்
(3) வார்த்தைகளற்ற உணர்ச்சிப்பாங்கான கூட்டுமத்தைக் கையாள்தல்
(4) நாடகத்தைப் பிரயோக அரங்க நுட்பங்களுடன் வடிவமைத்தல்
(5) பார்ப்போரை செயல்முனைப்பானவர்களாக ஆக்குதல் (……)

**28.** 'ஈழத்தில் நாடகமும் நானும்' எனும் அரங்கியல் நூல் எது பற்றியது?
(1) நாடகம் எழுதும் முறை (2) நாடகம் தயாரிக்கும் முறை
(3) அரங்க வரலாறு (4) நடிப்பு அனுபவம்
(5) அரங்கக் கட்டுமானம் (……)

**29.** இலங்கையில், ஆங்கிலக் கல்வியினால் உருவான மத்தியதர வர்க்கத்தினரின் இயல்பு நிலைச் சித்திரிப்பினை தொடக்கி வைத்தவர்
(1) கிங்ஸ் பெரிதேசிகர் (2) விபுலானந்த அடிகள் (3) க. கணபதிப்பிள்ளை
(4) கலைச்செல்வன் (5) எதிரிவீர சரச்சந்திர (……)

**30.** சிங்கள தொவில் சடங்கரங்கு நிகழ்த்தப்படும் அரங்கவெளி
(1) கரலிய (2) பூங்குடில் (3) தானயம்பல
(4) களத்துமேடு (5) திறந்த வெளியரங்கு (……)

**31.** யப்பானிய நடிப்பு மோடியில் 'மை' (MIE) எனப்படுவது
(1) தீவிரத் தன்மை கொண்ட மோடி
(2) பெருங்காட்சி, மோடிமைப்படுத்தப்பட்ட மோடி
(3) தாக்கமான வகை மாதிரியான மோடி
(4) குறியீட்டுப் பாங்கு, ஊமம், நடனம் ஆகியவற்றைக் கொண்ட மோடி
(5) பிரபல்யமானதும் நிலைநிறுத்தப்பட்டதுமான மோடி (……)

**32.** "சீன பீஜிங் ஒபேராவில் நடிகர் அணியும் வேட உடைகள், அதன் வர்ணங்கள் ஊடாகவே பாத்திரங்களும் இயல்புகளும் வெளிப்படுத்தப்பட்டன." ஒபேராவில் வரும் மஞ்சள் நிற ஆடை அணிந்தவர்கள்
(1) மந்திரிகளும் இராணுவத்தினரும் ஆவர்.
(2) அரச அலுவலர்களும் படை அதிகாரிகளும் ஆவர்.
(3) சக்கரவர்த்திகளும் அவர்களின் உறவினரும் ஆவர்.
(4) இளம் வயதினரும் வயது முதிர்ந்தோரும் ஆவர்.
(5) முரட்டுச் சுபாவமுடைய சக்கரவர்த்திகள் ஆவர். (……)

**33.** 'கொஹுங்க கங்காரிய' சடங்கு செய்யப்படுவதற்கான காரணம் **அல்லாதது** எது?
(1) கடந்த போகத்தில் நல்ல விளைச்சல் தந்தமை
(2) விஜயன் குவேனிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியமை
(3) பாண்டு வசுதேவன் வேங்கைப்புலி ஒன்றைக் கண்டு பயந்தமை
(4) 'கொஹுங்க' என்ற பாதிப்பிசாசும் பாதிக்கடவுளுமான உருவத்தை மகிழ்வித்தல்
(5) குடும்பக் கஸ்டத்தை நீக்குதலும் ஊருக்கும் நாட்டுக்கும் நன்மை கிடைக்கச் செய்தலும் (……)

**34.** சிங்கள 'நாடகம்' இல் கடவுள் வாழ்த்துப் பாடுபவர்
(1) பகுபூதய்யா (2) கோணங்கி (3) விகடகவி
(4) பொத்தே குரு (5) கட்டியக்காரன் (……)

**35.** சிங்கள நாடக வரலாற்றில் 'வீதி நாடக உலகின் அரசன்' என வர்ணிக்கப்படுபவர்
(1) தம்ம ஜாகொட (2) ஆர்.ஆர். சமரக்கோன்
(3) காமினி ஹத்தொட்டுவேகம (4) சுகதபால டி சில்வா
(5) குணசேன கலப்பதி (……)

**36.** யப்பானிய பிரபுத்துவ சடங்காசார வாழ்வின் காட்சிகளைச் சித்தரிக்கும் நாடகம்
(1) நோ (2) கபுக்கி (3) புன்ரகு (4) கோவாகா (5) கியோஜின் (……)

**37.** மத்தியகால பொது வணக்க முறை நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்ட அரங்கவெளி
(1) தேவாலயம் (2) ஊர்தி அரங்கு (3) பூத் அரங்கு
(4) பட்டணச் சதுக்கம் (5) மான்சன் அரங்கு (……)

**38.** பிரச்சினை நாடகங்களை மேற்கு ஐரோப்பாவில் தொடக்கி வைத்தவர்
(1) ஹென்றிக் இப்சன் (2) அன்ரன் செக்கோவ் (3) கார்சியா லோகா
(4) லூயி பிராண்டலோ (5) ஒகஸ்ற் ஸ்ரின் பேர்க் (……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள கலைஞர் வைத்திருக்கும் வாத்தியம் யாது?
(1) கிற்றார்
(2) சித்தார்
(3) வீணை
(4) தம்புரா
(5) குயிக்குலின்




(……)

**40.** மேல்வருவனவற்றுள் 'சிருங்காரம்' எனும் ரசத்தை வெளிப்படுத்தும் தெரிவு யாது?


(1)


(2)


(3)


(4)


(5)

(……)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 58 | විෂයය<br>பாடம் | நாடகமும் அரங்கியலும் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 3 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 4 | 38. | 1 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 5 | 40. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## உபபகுதி A

**1.** (i) 'கலை' என்ற எண்ணக்கரு பற்றி பாடசாலை, சமூகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விவரிக்குக.

(ii) தரப்பட்ட சிறுகதையொன்றை ஆற்றுகையாக உருவாக்குவதில் காணப்படும் சாதக, பாதகங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) சமகால சமூகத்தின் நிலைமையைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளதக்க ஆற்றுகையொன்றைக் குறிப்பிட்டு, அதில் பிரதியின் (Script) முக்கியத்துவம் பற்றி விளக்குக.

(5 × 3 = 15 புள்ளிகள்)

**2.** (i) சமஸ்கிருத நாடகத்தின் 'கதைப்பின்னல்', 'கட்டமைப்பு' என்பவற்றைச் சுருக்கமாக விவரிக்குக.

(ii) நாட்டிய சாஸ்திரம் கூறும் **இரண்டு** வகை நடிப்புப் பாணிகள் பற்றித் தெளிவுபடுத்துக.

(iii) சமகால ஈழத்து அரங்கில் நாட்டிய சாஸ்திரத்தின் பிரயோகம் பற்றி விளக்குக.

(5 × 3 = 15 புள்ளிகள்)

**3.** சேக்ஸ்பியரின் 'குளோப்' அரங்கு, ஈழத்துப் பாரம்பரிய 'வட்டக்களரி' அரங்கு என்பவற்றில் மேல்வருவன அமையுமாற்றை விவரிக்குக.

(i) ஆற்றுகை வெளி

(ii) ஆற்றுகை முறைமை

(iii) பார்வையாளர் துலங்கல்

(5 × 3 = 15 புள்ளிகள்)

## உபபகுதி B

**4.** ஈழத்தின் வெவ்வேறு காலப் பண்பாடுகளில் மேற்கிளம்பிய வெவ்வேறு அரங்க முறைமைகள் **இரண்டை** ஒப்பிட்டு விவரிக்குக.

(15 புள்ளிகள்)

**5.** பாரம்பரிய சமயச் சடங்குகளை அரங்கநிலையில் நின்று விவரிப்பதுடன், அவை எவ்வாறு சமூகக் குழுமநிலை அரங்காக விளங்குகின்றன என்பதையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) யப்பானிய 'கபுக்கி'

(ii) அபத்த நாடகம்

(iii) குறுநாடக ஆக்கம்

(iv) ஜெர்சி குறொட்டொவ்ஸ்கி

(v) ஆற்றுப்படுத்தலாக அரங்கு

(5 × 3 = 15 புள்ளிகள்)

※※※

01.

i. **கலை என்ற எண்ணக்கரு பற்றி பாடசாலை, சமூகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விவரிக்குக.**

- கலை என்பது பண்பாட்டினுள் நிலை கொண்டு வெளிப்படுத்துவதிலும் தொடர்புறுத்துவதிலும் மனிதத்திறன் தொழிற்படும் முறைமை என *Hongman* குறிப்பிடுகின்றார்.

- படைப்பாக்கத்திறனும் ஆக்கத் திறனுக்கான உந்துதலும் கலைப்படைப்புக்கு முக்கியமாக அமைகின்றது இந்த உந்துதலுக்கு சமூகம் முக்கிய காரணியாக அமைகின்றது. ஏனெனில் கலைப்படைப்புக்களில் சமூக வாழ்வியல் முறைமை, சமூக ஒழுங்கமைப்பு, பொருளாதார நடவடிக்கைகள், உறவு முறை தாக்கம் செலுத்துகின்றது. சமூகத்தை கலைப்படைப்பு பிரதிபலிக்கின்றது. சமூகத்தின் எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையமாக அமைகின்றது. றேய்மண்ட் வில்லியம்ஸ் என இதனை குறிப்பிடுகின்றார். இதனா-லேயே சமூகத்திற்கு சமூகம் கலைப்படைப்புக்கள் மாறுபடுகின்றது போது கலை சமூகத்திலிருந்து பல்வகைத்தன்மையும் கொண்டு வருகின்றது.

- பாடசாலை, சமூக கட்டமைப்பின் உள்ளடக்கலில் ஒன்று அதனால் சமூகத்தை சார்ந்த கலை படைப் புக்களையே இதுவும் பிரதிபலிக்கின்றது. ஆயினும் மட்டுப்படுத்தப்பட்ட தேவை, சூழல் இந்நிறுவனத்தின் கலைகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. சமூகம் பல குழுமங்களை கொண்டிருக்க பாடசாலை குறிப்பிட்ட குழும அமைப்பை கொண்டதால் அவர்கள் சார்ந்ததாகவும் அமையும்.

- பல்வேறு கலை வடிவங்கள் அல்லது பல்வேறு திறன் வடிவங்கள் இல்லாது கற்றல் தேர்ச்சியுடன் கூடிய குறிப்பிட்ட கலைப்படைக்களுக்கான உந்துதல் அதிகமாக உள்ளது. மாணவர்களின் உளத் தேவையின் அடிப்படையிலும் இங்கு கலைகள் படைக்கப்படுகின்றது.

ii. **தரப்பட்ட சிறுகதையொன்றை ஆற்றுகையாக உருவாக்குவதில் காணப்படும் சாதக, பாதகங்களைச் சுருக்கமாக விவரிக்குக.**

- படைப்பாக்க முறை வழிக்கு (ஊசநயவளைந ீசழஉநளள) சாதகமான, பாதகமான நிலைமைகள் அனுபவத்தினூடாக விளக்கப்படல் வேண்டும்.

- ஒரு குறிப்பிட்ட சூழமையிவிலே மனிதர்கள் இயங்குகின்ற முறைமையும் ஒரு பாத்திரத்தின் நிலையில் சம்பவங்கள் தோற்றுவிக்கின்ற மனக்கிளர்ச்சியும், சம்பவத்தின் செயல்கள் ஆசிரியரால் எடுத்துக் கூறப்படு:வதுமான இலக்கிய வடிவம் சிறு கதை எனலாம்.

**சிறு கதையொன்றை ஆற்றுகையாக உருவாக்குவதிலுள்ள சாதகமான விடயங்கள்**

- ஆற்றுகைக்கான சிறந்தகதைக்கருவை இலகுவாக தெரிந்தெடுக்க முடியும்.

- சூழமைவுகள், பாத்திரங்கள் முன்னரே ஒழுங்கமைப்பட்டிருப்பதனால் ஆற்றுகை வடிவமாக்கல் இலகுவாகின்றது.

- ஆற்றுகையின் கோர்ப்பு முறைமைக்கு ஏதுவாக அமைகின்றது.

**பாதகமான விடயங்கள்**

- நெறியாளரின் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்து விடுகின்றது.

- சிறுகதை செயல் வடிவம் கொடுக்க முடியாத சம்பவங்களை விபரிக்கின்ற போது அதனை ஆற்றுகை நிலைக்கு கொண்டு வருவது சவாலாக அமைகின்றது.

- ஆற்றுகை வடிவமைப்பில் சிறுகதை இல்லாதிருத்தல்.

- சிறுகதை ஆசிரியர் பாத்திரத்தின் பௌதிக இயல்பை அரங்கில் முழுமையாக கொண்டு வர முடியாமல் இருக்கும்.

- கதை பல களங்களை கொண்டமைந்ததால் ஆற்றுகை குறுகிய நேரத்தில் படைக்கும் போது பல களப்படைப்பு சவாலாக அமையும்.

(05 புள்ளிகள்)

iii. **சமகால சமூகத்தின் நிலைமையைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளத்தக்க ஆற்றுகையொன்றைக் குறிப்பிட்டு, அதில் பிரதியின்** (Script) **முக்கியத்துவம் பற்றி விளக்குக.**

- சமகால சூழலுக்கேற்ப கதைகரு தெரிவு செய்யப்பட்டு
உதாரணம் : போரின் பின்னரான வாழ்வியல் மாற்றங்கள்

- நாடகாசிரியர் அல்லது நெறியாளரின் திறன், விருப்பத்திற்கேற்ப மோடிமை தெரிவு செய்யப்படும் ஆயினும் இவற்றுக்கு அடிப்படையாக ஒரு நாடகம் பிரதி தேவை.

- நாடகப் பிரதி ஆற்றுகையின் மூலமாக அமைவதோடு ஆரம்பத் திட்டமிடலுக்கு உதவுகின்றது.

- தெரிவு செய்யப்படும் கதைக் கருவிக்கிற்கேற்ப பாத்திரங்கள், சூழமைவுகள், உணர்வுகள், சம்பவத் தொகுப்புக்கள், உரையாடல் என்பன எடுத்துரு ஊடாக ஒழுங்கமைக்கப்படுகின்றது.

- புதிய கதைக்கருவை தெரிவு செய்கின்ற போது புதிய பிரதியின் தேவை அவசியமாகின்றது. இது ஆற்றுகையொன்றின் முன் செயலொழுங்குகள் யாவற்றுக்கும் அடித்தளமாக அமைகின்றது.

- பிரதியொன்றினை வைத்துக்கொண்டு ஆற்றுகைக்கு முன்னரான பகுப்பாய்வு விமர்சனத்தை செய்ய முடிவதோடு இது ஆற்றுகைக்குரிய முன்னரான திரு.த்தங்களுக்கு ஏததுவாக அமையும்.
உதாரணம் : சமகாலத்தின் பொருத்தப்பாட்டிற்கு ஏதுவான திருத்தங்கள்

- ஆற்றுகையில் ஈடுபட இருக்கும் கலைஞர்கள் யாவர்க்கும் அளிக்கை தொடர்பான பருமட்டான முழுமை பற்றிய தெளிவை எழுத்துருவை வைத்துக்கொண்டு தெரிந்து கொள்ள முடியும்.

(05 புள்ளிகள்)

**02.**

i. **சமஸ்கிருத நாடகத்தின் கதைப்பின்னல் கட்டமைப்பு என்பவற்றை சுருக்கமாக விபரிக்குக.**

**கதைப்பின்னல்**

- கதைப்பின்னல் என்பது சம்பவங்களின் நிரலொழுங்கு
- அர்த்தப் பிரகிருதிகள் எனவும் அழைக்கப்படும்.
- சமஸ்கிருத கதைப்பின்னலின் மீது பிந்து, பதகா, பிரகரி, கார்ய ஆகிய

ஐந்து கூறுகளையும் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பின் (2 1/2 புள்ளிகள்)

**கட்டமைப்பு**

- கட்டமைப்பு ஐ.ந்து படிநிலைகளைக் கொண்டது.
- இப்படிநிலை ஆரம்ப, பிரயத்தன, பிரத்தியாச, நியதாப்தி, பலாகம

என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்கியிருப்பின் (2 1/2 புள்ளிகள்)

ii. **நாட்டிய சாஸ்திரம் கூறும் இரண்டு வகை நடிப்புப் பாணிகள் பற்றித் தெளிவுபடுத்துக.**

அ. லோக தர்மி
ஆ. நாட்டிய தர்மி ஆகியன பற்றி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

(05 புள்ளிகள்)

iii. **சமகால ஈழத்து அரங்கில் நாட்டிய சாஸ்திரத்தின் பிரயோகம் பற்றி விளக்குக.**

- நாடக அமைப்பிலும் நாடகம் வெளிப்படுத்தும் முறைமையிலும் (நால்வகை சித்திரிப்பு) தற்கால ஈழத்து அரங்க வெளிப்பாட்டு முறைமைகளில் நாட்டிய சாஸ்திரத்தின் பிரயோகம் பற்றி பரீட்சார்த்திகள் அனுபவ ரீதியாக விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

(05 புள்ளிகள்)

**03. சேக்ஸ்பியரின் குளோப் அரங்கு, ஈழத்துப் பாரம்பரிய வட்டக்களரி அரங்கு என்பவற்றில் மேல்வருவன அமையுமாற்றை விளக்குக.**

i. **சடங்கரங்கு**

- எலிசபெத் காலத்தில் ஆரம்பத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட இடத்தினை 'இன்' என அழைத்தனர்.
- 'இன்' என அழை.க்கப்பட்டதன் மாற்றம் பெற்று வந்த அரங்குகள் பலதுள் குளோப் (1599) அரங்கும் ஒன்றாகும்.
- குளோப் அரங்கு எண்கோண வடிவில் அமைந்த கட்டிடம்.
- இவ்வரங்கு நிலத்திலிருஇந்து 4 - 6அடி உயரமானது.
- இவ்வரங்கின் பின்புறம் வரையும் செல்லும் இதன் முன் மேடையே முன் அரங்கு ஆகும். இதுவே பிர- தான களம் ஆகும்.

- முன் அரங்கிற்குப் பிஃன்னால் உள்ளக அரங்கு காணப்படும். இது பாத்திரங்கள், பொருட்கள் வெளிப்பட உதவும்.
- அரங்கின் இரு கதவுகள் காணப்படும். அதனூடாக நடிகர் உள்ளே வெளியே செல்வர்.
- மேடையின் இரு புற வாசலுக்கு மேலே நேரே இரு யன்னல் காணப்படும்.
- மூன்றாவது தளத்தில் இசைக்குழுவினர் இருப்பர்.
- இரு தளத்துடன் மூன்றாவது தளத்தையும் நடிப்பிற்காகப் பயன்படுத்துவர்.
- பார்வையாளர் அமரக்கூடிய வகையில் பல்கனி அமைப்புள்ளது.
- மு.ன் துருக்கிய பகுதியைச் சுற்றி பார்வையாளர்கள் நிற்கின்றனர்.

(05 புள்ளிகள்)

ii. **ஆற்றுகை முறைமை**

- பெரும்பாலும் மாலை நேரங்களில் ஆற்றுகை இடம்பெற்றது.
- ஆற்றுகை ஆரம்பிக்கும் போது அரங்கின் கூரையில் கொடியேற்றப்படும்.
- அரங்கில் காணப்படும் இரு கதவுகளைப் பயன்படுத்தி நடிகர் உள்ளே வரவும் வெளியே செல்லவும் பயன்படுத்தினர்.
- நடிகர்களுக்கு எந்த இடையூறையும் ஏற்படுத்தவில்லை.
- மேடையின் இரு புற வாசலுக்கும் மேலே, நேரே இரு யன்னல்கள் இருந்தன. அதன் ஊடாக நடிகர்கள் உறவாடினர்.
- மூன்றாவது தளத்தையும் கடிப்பதற்காகப் பயன்படுத்தினர்.
- ஆற்றுகையின் தேவைக்காக மரம், பாறை, படுக்கை என்பன பயன்படுத்தப்பட்டன.
- புதை குழிக் காட்சிக்குப் பொறி வாயிலும், பிசாசு, நெருப்பு, புகை போன்றவற்றைக் காட்டப் பொறிகளும் கம்பிகளும் பயன்படுத்தியதோடு, செய்திகளை அறிவிக்க பணிகள், பீரங்கிகள் பயன்படுத்தினர்.
- இரவுக் காட்சிகளைக் காட்டப் பந்தம், விளக்கு, மெழுகுதிரி பயன்படுத்தினர்.
- பெருங்காட்சிப் பண்புடைய உரையாடல்கள் காட்சியலங்காரங்களும் இசை, நடனம் என்பனவும் ஆற்றுகையின் போது இடம்பெற்றன.

(05 புள்ளிகள்)

iii. **பார்வையாளர் துலங்கல்**

- பார்வையாளர்கள் அனுமதிச் சீட்டுப் பெற்று ஆற்றுகையைப் பார்வையிட்டனர்.
- பல்களி இருக்கைகளுக்கு கூடிய பணமும் முன் துருத்திய பகுதிக்கு குறைந்த பணமும் முன் துருக்கிய பகுதிக்கு குறைந்த பணமும் வசூலிக்கப்பட்டது.
- பார்வையாளரை உணர்ச்சி நிலைக்கு உட்படுவதாக அரங்கு அமைந்தது.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

பிரிவு B

**04. ஈழத்தின் வெவ்வேறு காலப் பண்பாடுகளில் மேற்கிளம்பிய வெவ்வேறு அரங்க முறைமைகள் இரண்டை ஒப்பிட்டு விவரிக்குக**

ஈழத்தில் உருவான தமிழ், சிங்கள நாடகங்களில் எவையேனும் இரு அரங்க முறைகளை குறிப்பிட்டு ஒப்பிட்டு விபரித்தல் வேண்டும்.

ஈழத்தில் உருவான தமிழ் முறைகளுக்கு உதாரணங்களாக

**கூத்துக்கள்**
வடமோடி
தென்மோடி
பறை மேளக் கூத்து
வசந்தன கூத்து
மகிடிக் கூத்து
காத்தவராய கூத்து
வட பாங்கு
தென்பாங்கு
கோவலன் கூத்து

இசை நாடகங்கள், சவீன நாடகங்கள் ஈழத்தில் உருவான சிங்கள அரங்க முறைகளும் உதாரணங்களாக
கோலம்
சொக்கரி
நாடகம்
நுகர்த்தி போன்றன
சிங்கள நவீன நாடகங்கள்

இவற்றில் 2 ஐ குறிப்பிட்டு ஒப்பிட்டு எழுதுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

(05 புள்ளிகள்)

**05. பாரம்பரிய சமயச் சடங்குகளை அரங்க நிலையில் நின்று விபரிப்பதுடன், அவை எவ்வாறு சமூகக் குழுமநிலை அரங்காக விளங்குகின்றன என்பதையும் விளக்குக.**

- சமயச் சடங்குகள் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம், சடங்கு தொடர்பாக அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்களைக் குறிப்பிடுதல்.

- சடங்குகள் நம்பிக்கை காரணமாகச் செய்யப்படுபவை – பேரா. க. சிவத்தம்பி

- தன் வாழ்க்கைப் போரில் இயற்கை சக்திகளையும், பருவகால மாற்றங்களையும் தன்வயப்படுத்த மனிதன் கையாண்ட சில நடை முறைகளே சடங்குகளாகின. – பேரா. சி.மௌனகுரு

போன்ற வேண்டுகோள்களைக் குறிப்பிட்டிருத்தல். (01 புள்ளி)

- ஆற்றுவோர், பார்ப்போர், வெளி என்பவற்றின் இணைப்பு அரங்காகும்.

- அரங்கு என்பது நாடக நிகழ்ச்சி கட்புலனாக முகிழ்ந்து எழும் இடத்தைக் குறிக்கும்.

- ஆரம்பம், முரண்பாடு, தீர்மானம் என்ற ஒழுங்கு காணப்படும்.

- பல கலைஞர்களும் பல கலைகளும் ஒன்றிணையும் இடம் அரங்கு

இவ்வாறான அரங்கு பற்றிய எண்ணக்கருவைத் தெளிவுபடுத்தல். (01 புள்ளி)

மேற்படி எண்ணக்கருக்களைப் புரிந்து கொண்டமையை வெளிப்படுத்தி, சடங்குகள் சிலவற்றை உதாரணமாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விபரித்தல்.

- ஆற்றுவோர், பார்ப்போர், ஆற்றுகை வெளி ஒன்றிணைதல்.
- ஆள் மேற்கொள்ளல்.
- மீள நிகழ்த்துகை
- ஆடல், பாடல், ஊமம், உரையாடல்கள்
- ஊர்வலப் பண்பு
- வேடவுடை, ஒப்பனை, வேட முகப்பயன்பாடு
- சமூக ஒருமைப்பாடும், சமூகத்தை ஒன்று கூட்டுதலும்
- சேர்ந்து கருமமாற்றுதல்
- தொடர்பு கொள்ளல்.
- உணர்ச்சி வெளிப்பாடும் பரிமாற்றமும்

இவ்வாறான விடயங்களில் குறைந்தது மூன்று விடயங்களை கருத்திலெடுத்து சமய சடங்குகளின் அரங்கப் பண்புகளை விளக்குதல்.

(03 புள்ளிகள்)

- சமயச் சடங்குகளில் காணப்படுகின்ற அரங்க நிலைப்பட்ட பண்புகளில் ஆள் மேற்கொள்ளல், ஆற்றுவோர் பார்ப்போர் ஆற்றுகை வெளியில் ஒன்றிணைதல், ஊர்வலப் பண்பு, சமூக ஒருமைப்பாடும் சமூகத்தை ஒன்று கூட்டுதல், தொடர்பு கொள்ளல், உணர்வுகளை வெளிப்படுத்தல் போன்ற பண்புகளால் சமூகக் குழுமநிலை அரங்காக விளங்குகின்றது என்பதை விளக்குதல்.

(இப் பண்புகளில் 3 குறிப்பிட்டு விளக்குதல் - 03 புள்ளிகள்)

- நவீன அரங்கவியலாளர்கள் சடங்கில் காணப்படுகின்ற குழும நிலை அரங்கப் பண்பைப் பயன்படுத்துகின்ற நிலைமையை குறிப்பிட்டு விளக்குதல்.
  உதாரணமாக : குறொட்டொவ்ஸ்கி தனது ஆற்றுகை மூலங்களை பெற்றுக்கொண்ட முறை, அன்ரோனியோ ஆர்த்தே, பீற்றர் புறூக், றிச்சாட் கென்னர் ஆ.கியோர் சடங்கின் அட்டைகளைப் பயன்படுத்திய முறை.

- அகஸ்தாபோல் பார்ப்போரை செயல் முனைப்பானவர்களாக அரங்கில் தொழிற்பட வைக்கவும் அரங்கை சமூகத் தளை, உளவியல் தளை நீக்கத்திற்கான ஒன்றாக வடிவமைக்கவும் சடங்கியல் மூலங்களையே அடிப்படையாகக் கொண்டார்.

- கலாநிதி. க. சிதம்பரநாதன் சமூகம் சார்ந்த அரசியல் சார்ந்த பண்பாட்டு நிலை சார்ந்த ஒடுக்கப்பட்ட உணர்வுகளை மனம் திறந்து வெளிப்படுத்துவதற்கான ஒரு சாதனமாக அரங்கை கட்டமைப்பதற்கு சடங்காற்றுகை முறையையே அடிப்படையாகக் கொண்டார்.

- தெருவெளி அரங்கவியலாளர்களின் ஆற்றுகைப் பண்புகள் சமயச் சடங்கு சார்ந்த குழுமநிலை பண்பைக் கொண்டது.

(குறைந்தது இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்தி எழுதியிருந்தால் 02 புள்ளிகள்)

**06. மேல்வருவனவற்றுள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **யப்பானிய கபுக்கி**

- யப்பானின் பண்டைக்கால மத்தியகால செய்திகளை கருவாகக் கொண்டது.
- அரங்க மூலகங்களைப் பயன்படுத்தி தாளத்தோடிணைந்த சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்ட முறைமை
- க – பாடல், பு – ஆடல், கி – நடிப்பு
- களாமிச்சிப் பாதையோடிணைந்த அரங்கச் சிறப்பு
- பார்வையாளர் உறவு கூறப்பட வேண்டும்.

(05 புள்ளிகள்)

ii. **அபத்த நாடகம்**

- இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பிரதிபலிப்பினைப் பின்னணியாகக் கொண்டது.
- காரண காரியமற்ற தன்மை காணப்படல்.
- சொல்லிலும் செயலிலும் காணப்பெறும் முரண்பாடு அர்த்தமற்றது.ம் ஆழமானதுமான மொழிப்பிரயோகம்.
- விரக்தி, சோர்வு, நம்பிக்கையின்மை காணப் பெறுதல்.
- படிமங்கள், மரபுத்தொடர்கள், குறியீடுகள், ஊமப் பாங்கான செயல்களின் பயன்பாடு

போன்ற விடயங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

iii. **குறுநாடக ஆக்கம்**

- மிகக் குறைந்த  கால அளவுக்குய் நிகழ்த்தக்கூடியதாக அமைதல் வேண்டும்.
- சிறிய கதைப் பின்னலையும், குறைந்த பாத்திரங்களையும் கொண்டது.
- சொல்லாடல்கள் குறைந்தளவானதாகவும், அர்த்தமுடையதாகவும் காணப்படுகின்றன.
- மேடைக்குறிப்புக்கள் தெளிவானதாகவும் குறைந்தளவானதாகவும் காணப்படுகின்றன.

(இது போன்ற விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் புள்ளி வழங்குக.) (05 புள்ளிகள்)

iv. **ஜெர்சி குறொட்டொவ்ஸ்கி**

- போலந்து நாட்டவர்
- வறுமை அரங்கைத் தோற்றுவித்தது.
- இவர் தனது ஆற்றுகை மூலகங்களை விவிலியப் பாடங்களில் இருந்தும் பொது வணக்கப் பாடங்களில் இருந்தும் பெற்றுக் கொண்டார்.
- அரங்க மூலங்களில் நடிகனின் திறமைக்கே முக்கியத்துவம் கொடுத்து நாடகத்தினை நிகழ்த்திக் காட்டினார்.
- நடிகனுக்கும் பார்வையாளருக்குமான உறவினை வலுப்படுத்தினார்.
  உதாரணமாக நடிகனின் நடிப்பானது நாடகத்தைப் பார்ப்போர் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்வதற்கான ஒரு வழிகாட்டுதலாக அமைய வேண்டும் என்று பரீட்சித்துக் காட்டினார்.

(05 புள்ளிகள்)

v. **ஆற்றுப்படுத்தலாக அரங்கு**

- பார்வையாளரின் ஔத்தளை நீக்குவதற்கு ஏதுவாக அமைந்த நாடகங்கள்
- பாரம்பரிய சடங்கரங்குகள் ஆற்றுப்படுத்தலுக்கான பல நுட்பங்களை உள்ளடக்கி உள்ளது.
  உதாரணம் : ஆடல், பாடல், தியானம்
- மேலைத் தேயத்தில் நாடக வகையில் முக்கியமானவராக குரோட்டோவிஸ்கியும் இலங்கைத் தமிழ் அரங்கில் சிதம்பரநாதன் போன்றோரையும் குறிப்பிடலாம்.

  (இது போன்ற குறிப்புக்கள் இருப்பின் புள்ளிகள் வழங்குக.)

(05 புள்ளிகள்)

(3 × 5 = 15 புள்ளிகள்)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

17.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
※ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
※ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** உளவியல்சார் நாடகங்களைப் படைத்த கிரேக்க நாடகாசிரியர்
(1) மெனாண்டர் (2) ஈஸ்கிலஸ் (3) அரிஸ்டோபன்ஸ்
(4) சோபோகிளிஸ் (5) யூரிபிடிஸ் (......)

**2.** சிங்கள 'தொவில்' சடங்கரங்கில் வருகின்ற பாத்திரம்
(1) வெசமுனி (2) கோணங்கி (3) பொத்தேகுரு
(4) பயூன் (5) பகுபூதையா (......)

**3.** சங்க காலத்தில் கோடு, முழவு ஆகிய வாத்தியங்களை வாசித்தோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) பொருனர் (2) பாணர் (3) கோடியர்
(4) விறலியர் (5) வயிரியர் (......)

**4.** இசை, நடனம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆற்றுகைக் கலைஞர்கள்
(1) வி.வி. வைரமுத்து, அரசு
(2) சின்னமணி, பாலதாஸ்
(3) தைரியநாதன், கலாமணி
(4) பாலமுரளி கிருஷ்ணா, ருக்மணி அருண்டேல்
(5) பாலமுரளி கிருஷ்ணா, கண்ணன் (......)

**5.** த சோபேறி (The Choephori), புளுட்டஸ் (Plutus), அன்ரிகனி (Antigone) போன்ற கிரேக்க நாடகங்களின் ஆசிரியர்கள் முறையே
(1) ஈஸ்கிலஸ், அரிஸ்டோபன்ஸ், யூரிபிடிஸ்
(2) ஈஸ்கிலஸ், அரிஸ்டோபன்ஸ், சோபோகிளிஸ்
(3) யூரிபிடிஸ், அரிஸ்டோபன்ஸ், மெனாண்டர்
(4) யூரிபிடிஸ், மெனாண்டர், சோபோகிளிஸ்
(5) சோபோகிளிஸ், அரிஸ்டோபன்ஸ், மெனாண்டர் (......)

6. வடமோடிக் கூத்தில் வருகின்ற வீரர் பாத்திரங்களுக்குரிய தனித்துவமான ஆட்டங்கள்
(1) ஒய்யாரம், எட்டுப்போடல், தட்டடி
(2) நாலடி, குத்துமிதி, பாய்ச்சல்
(3) ஒய்யாரம், தட்டடி, சிறுவட்டம்
(4) எட்டடி, நாலடி, ஒய்யாரம்
(5) தட்டடி, எட்டடி, நாலடி
(……)

7. ‘எந்தையும் தாயும்’ நாடகத்தில் ஒரே வகையான உளவியற்பாங்கான பாத்திரங்கள் யாவை?
(1) செல்லவரட்ணம், ஜயாத்துரை
(2) மகேஸ்வரி, ஜயாத்துரை
(3) சங்கரப்பிள்ளை, வசந்தி
(4) சங்கரப்பிள்ளை, செல்வரட்ணம்
(5) கண்ணன், வசந்தி
(……)

8. ‘பாசன்’ எழுதிய நாடகங்களுள் மூன்று அங்கங்களைக் கொண்டது
(1) ஊருபங்கம்
(2) கர்ணபார
(3) அவிமாரக்க
(4) தூதவாக்கிய
(5) பஞ்சராத்ர
(……)

9. மதமாற்றம், பயணம், அந்தஸ்து, குடித்தனம் ஆகிய நாடகங்களை மேடையேற்றிய பல்கலைக்கழகம்
(1) கொழும்புப் பல்கலைக்கழகம்
(2) பேராதனைப் பல்கலைக்கழகம்
(3) கிழக்குப் பல்கலைக்கழகம்
(4) கட்டுபெத்த பல்கலைக்கழகம்
(5) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(……)

10. மேல்வருவனவற்றுள் கைவினை தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) மனிதனது கைத்திறன் வெளிப்பாடு சார்ந்தது.
(2) ஓர் அலங்காரக் கலை ஆகும்.
(3) உருவாக்கப் படிமுறை சார்ந்து ஆரம்பம் முதல் முடிவு வரை திட்டவட்டமான வரையறை காணப்படும்.
(4) எதிர்பார்க்கின்ற வடிவ முழுமையைப் பெறமுடியும்.
(5) ஆக்குபவருடைய உளவியல் கோலங்கள் அதனைச் சுவைப்போரை நேரடியாக ஊக்கப்படுத்தும்.
(……)

11. உலக நாடக வரலாற்றில் முதல் நெறியாளராகக் கொள்ளத்தக்கவர்
(1) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி
(2) லோட்சேக்ஸ் மனிங்கன்
(3) பேட்டோல்ட் பிறெ.்ட்
(4) எமிலிசோலா
(5) சேக்ஸ்பியர்
(……)

12. ‘மேடை முகாமைத்துவம்’ என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி எது?
(1) 14 ஆம் நூற்றாண்டு
(2) 16 ஆம் நூற்றாண்டு
(3) 18 ஆம் நூற்றாண்டு
(4) 19 ஆம் நூற்றாண்டு
(5) 20 ஆம் நூற்றாண்டு
(……)

13. “மேடையில் துலங்குவதற்கேற்ப பார்வையாளர்கள் துலங்க வேண்டும்” எனக் குறிப்பிட்டவர்
(1) பிளேட்டோ
(2) அரிஸ்டோட்டல்
(3) றிச்சேர்ட் செக்னர்
(4) ஒகஸ்தா போல்
(5) பீற்றர்புறூக்
(……)

14. இலங்கையில் ‘கோலம’ ஆற்றுகை இன்றும் பயில்நிலையில் இருந்து வரும் பிரதேசம் எது?
(1) மேல் மாகாணம்
(2) வடமத்திய மாகாணம்
(3) மத்திய மாகாணம்
(4) கரையோர தாழ்நாட்டுப் பிரதேசம்
(5) உலர் வலயம்
(……)

15. பங்குகொள் அரங்க முறைமையை அறிமுகம் செய்த மேலைத்தேய அரங்கவியலாளர்
(1) மக்ஸ்றெயின் காட்
(2) யூசினோ பாபா
(3) ஒகஸ்தா போல்
(4) றிச்சேர்ட் சதேண்
(5) பீற்றர்புறூக்
(……)

16. “நாடகாசிரியர் ஒருவர் உண்மையான வாழ்வின் ஒரு பகுதியை நேர்மையோடு மேடையில் அமைத்துக்காட்ட வேண்டும்” எனக் குறிப்பிட்டவர்
(1) அன்ரன் செக்கோவ்
(2) பேர்ணாட்ஷா
(3) ஹென்றிக் இப்சன்
(4) எமிலிசோலா
(5) சாமுவேல் பெக்கட்
(……)

17. யதார்த்த குறியீட்டுக் காட்சிகளைத் தமது எழுத்துக்களினூடாக அறிமுகம் செய்த நாடகாசிரியர்
(1) ஸ்றின்பேர்க்
(2) அன்ரன் செக்கோவ்
(3) பென்ஜோன்சன்
(4) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி
(5) ஹென்றிக் இப்சன்
(……)

**18.** '30 செக்கனில் மூச்சு' என்ற நாடகத்தின் ஆசிரியர்
(1) யூரிப்பிடிஸ் (2) செனேக்கா (3) சாமுவேல் பெக்கட்
(4) அன்ரன் செக்கோவ் (5) கிறிஸ்தோபர் மாலோவ் (......)

**19.** நவவேட்கைவாத அரங்கின் தந்தையாகக் கருதப்படுபவர்
(1) யூஜினோ பாபா (2) அன்ரனின் ஆட்டுவாட் (3) ஒகஸ்தாபோல்
(4) பாதல் சர்க்கார் (5) ஹென்றிக் இப்சன் (......)

**20.** இந்தியாவின் ராம்லீலா அரங்க முறைமையைப் பின்பற்றிய மேலைத்தேய அரங்கவியலாளர்
(1) றிச்சேர்ட் செக்னர் (2) றிச்சேர்ட் சதேண் (3) றசீன்
(4) மக்ஸ்றெயின் கார்ட் (5) பீற்றர் புறூக் (......)

**21.** 1970 களில் எழுதபெற்ற வர்க்க முரண்பாடுகளைப் பேசும் நாடகங்கள் யாவை?
(1) மாயமான், கடூழியம், பொறுத்தது போதும்
(2) காலம் சிவக்கிறது, மாயமான், சங்காரம்
(3) விழிப்பு, கடூழியம், பொறுத்தது போதும்
(4) காலங்கள் அழிவதில்லை, மானிடம் என்பது புல்லோ, கோடை
(5) உயிர்த்த மனிதரின் கூத்து, மாயமான், மண்சுமந்த மேனியர் (......)

**22.** கூத்தும் பரதமும் இணைந்த நாடக வடிவம்
(1) அற்றைத் திங்கள் (2) சக்தி பிறக்குது (3) கந்தன் கருணை
(4) உயிர்த்த மனிதரின் கூத்து (5) புதியதொரு வீடு (......)

**23.** சீன ஒபேறா நாடகத்தின் மூலகர்த்தாவாக விளங்கியவர்
(1) சியான் யூயின் (2) மீ லான் பாங்க் (3) வீ பூஷாகே
(4) சியாமி மொரோகியோ (5) சுவனாமி கியோட்சுகு (......)

**24.** கொப்பஸ் கிறிஸ்ரி விழாவில் பெருமளவில் மேடையேற்றப்பட்ட மத்தியகால நாடகம்
(1) அற்புத நாடகம் (2) மறைபொருள் நாடகம் (3) பொது வணக்கமுறை
(4) ஒழுக்கப்பண்பு நாடகம் (5) பாணர் இசை நிகழ்வு (......)

**25.** அரங்கிற்கு வராத பாத்திரங்கள் பேசுவதற்காக சேக்ஸ்பியர் கையாண்ட மொழி உத்தி
(1) தனிமொழி (2) புறச்சொல் (3) தன்னுரை
(4) ஆகாயக் கிளர்த்தல் (5) உருவகம் (......)

**26.** இரட்டைக் கதைப்பின்னல் முறையில் அமைந்த சேக்ஸ்பியரின் சிறந்த அவலச்சுவை நாடகம்
(1) ஹம்லட் (2) கிங்லியர் (3) ஒத்தெல்லோ
(4) யூலியசீசர் (5) மக்பெத் (......)

**27.** மேல்வருவனவற்றுள் ஈடிப்பஸ் நாடகம் பற்றிய **தவறான** கூற்று எது?
(1) தீபிய புராணம் பேசுவது.
(2) கிரேக்க திறஜெடி வகையைச் சார்ந்தது.
(3) தெரிந்து செய்யும் தவறு பற்றியது.
(4) குழந்தை சண்முகலிங்கத்தால் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.
(5) நாயகனின் அவல நிலைப்பட்ட துன்பம் பற்றி எடுத்துக்கூறுவது. (......)

**28.** பட்டறை அரங்கினை அறிமுகம் செய்த மேலைத்தேய அரங்கவியலாளர்
(1) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி (2) அன்ரனி ஆட்டுவாட் (3) ஒகஸ்தாபோல்
(4) பீற்றர் புறூக் (5) ஜேர்சி குறோட்டோவ்ஸ்கி (......)

**29.** கிங்லியர் நாடகத்தில் வரும் பெண் பாத்திரங்களைக் கொண்ட தொகுதி
(1) எட்கர், கோணேல், கோடில்லியா (2) எட்மண்ட், றீகன், கோணேல்
(3) குளசெஸ்ரர், றீகன், கோணேல் (4) கோணேல், றீகன், கோடில்லியா
(5) றீகன், எட்மண்ட், எட்கர் (......)

**30.** அரசியல் உள்ளடக்கத்தைக் கொண்டு ஆற்றுகை செய்யப்பெற்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் யாவை?
(1) துரோகிகள், தவறான எண்ணம்
(2) உடையார் மிடுக்கு, துரோகிகள்
(3) பொருளோ பொருள், கண்ணன் கூத்து
(4) முருகன் திருகுதாளம், சங்கிலி
(5) நாட்டவன் நகர வாழ்க்கை, பொருளோ பொருள் (......)

**31.** சிங்கள யதார்த்தவாத நாடகங்களைச் சமூக யதார்த்தம் தேடும் கலை ஊடகமாக மாற்றியமைத்தவர்
(1) தம்ம ஜாகொட (2) ஹென்றி ஜயசேன (3) குணசேன கலப்பதி
(4) தயானந்த குணவர்த்தன (5) சுகதபால டி சில்வா (......)

**32.** ஈழத்தில் வெளிவந்த நாடக சஞ்சிகைகளைக் கொண்ட தொகுதி எது?
(1) அரங்கம், ஓலை, காலச்சுவடு (2) வெளிச்சம், ஓலை, காலச்சுவடு
(3) அரங்கம், ஆற்றுகை, கூத்தரங்கம் (4) கலைமுகம், ஜீவநதி, ஆற்றுகை
(5) வெளிச்சம், கலைமுகம், ஜீவநதி (......)


**33.** பல்கலைக்கழக நாடக வளர்ச்சியில் பங்குகொண்ட நாடக ஆளுமையினர் யாவர்?
(1) இளைய பத்மநாதன், சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, மா. சண்முகநாதன்
(2) சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, எதிரிவீர சரத்சந்திரா, க. கணபதிப்பிள்ளை
(3) அ. முத்துலிங்கம், பிரான்சிஸ் ஜெனம், அ. நா. கந்தசாமி, சொக்கன்
(4) பௌசுல் அமீர, மரியசேவிய அடிகள், நந்தி, மாவை நித்தியானந்தன்
(5) நா. சுந்தரலிங்கம், சி. மௌனகுரு, க. சிதம்பரநாதன், அரசையா (......)

**34.** அரிஸ்டோட்டல் தனது கவிதையியலில் குறிப்பிட்டதன்படி நாடகத்திற்கு மிக அவசியமானது
(1) இசை (2) காட்சி (3) கதைப்பின்னல்
(4) கரு (5) சிந்தனை (......)

**35.** கிங்லியர் நாடகத்தில் வரும் மேல்வரும் உரையாடலைக் கருதுக.
A : இதுதான் சத்திய முடிவா?
B : அவரது ஊழி முடிவின் நிழலா?
C : வீழ்ந்து முடிய வேண்டியதுதான்.
மேற்படி உரையாடலில் இடம்பெறும் A, B, C ஆகிய பாத்திரங்கள் முறையே யாவை?
(1) எட்கார், எட்மண்ட், ஆல்பனி (2) லியர், செஸ்டர், எட்கார்
(3) கென்ட், எட்கார், ஆல்பனி (4) எட்மண்ட், எட்கார், கென்ட்
(5) செஸ்டர், எட்மண்ட், ஆல்பனி (......)

**36.** ‘ஒரு பாவையின் வீடு’ நாடகத்தில் அடிக்கடி பொய் சொல்லும் பாத்திரமாக நாடகாசிரியரால் சித்திரிக்கப்படும் பாத்திரம் யார்?
(1) ராங் (2) நோரா (3) கெல்மர்
(4) கிறிஸ்ரீனா (5) குறொக்ஸ்ரட் (......)

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள வேட முகம் எந்த நாடக பாணிக்குரியது?
(1) திறஜெடி
(2) கொமெடி
(3) சற்றயர்
(4) வரலாறு
(5) பொது வணக்கவகை முறை



(......)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர் யார்?



(1) ஹென்றிக் இப்சன்
(2) அன்ரன் செக்கோவ்
(3) பேட்டோல்ட் பிறெ.்.ட்
(4) பேர்னாட்ஷா
(5) றசீன்

(......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளது 'வெனிஸ் நகர வணிகன்' நாடகத்தில் இடம்பெறும் எந்தப் பாத்திரமாகும்?



(1) அன்ரனியோ
(2) பகார்னியோ
(3) ஷைலொக்
(4) போர்சியா
(5) மாண்டலோ

(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள இந்திய நாடகாசிரியர் யார்?



(1) காளிதாசர்
(2) பாசர்
(3) ஸ்ரீ ஹர்சர்
(4) சூத்திரகர்
(5) பரதர்

(......)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **58**

විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 2 | 21. | 3 | 31. | 5 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 2 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 4 | 26. | 2 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 5 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 5 | 18. | 3 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 2 | 29. | 4 | 39. | 3 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 1 | 40. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

✳ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) வில்லியம் சேக்ஸ்பியரது 'கிங்லியர்' நாடகத்தின் பிரதான மோதுகை யாது? (3 புள்ளிகள்)

(ii) 'கிங்லியர்' பாத்திரம் பெருங்காட்சிப் பண்புகளுடன் வெளிப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) பொதுமையான மனித உணர்வுகள் 'கிங்லியர்' நாடகத்தினூடாக வெளிக்கிளம்பும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. (7 புள்ளிகள்)

**2.** (i) 'இராவணேசன்' நாடகத்தின் கரு, மோடி, பாத்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) இராவணன், மண்டோதரி ஆகிய பாத்திரங்களுக்கு இடையேயான மோதுகை செயல்நிலையில் வெளிப்படும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) இராவனேசன் நாடகத்தில் 'இந்திரஜித்' பாத்திரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள முறை பற்றி விளக்குக. (7 புள்ளிகள்)

**3.** (i) ஈழத்தில் தேன்றிய 'பா' நாடகங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) 'கோடை' நாடகப் பாத்திரச் சித்திரிப்பில் கிராமிய சமூகப் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் துல்லியமாக வெளிப்படும் விதத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) 'கோடை' எழுத்துருவை மையப்படுத்தி அக்கால ஏகாதிபத்திய ஆட்சி முறை மக்களின் மனப்பாங்கில் ஏற்படுத்திய பாதிப்பினை விளக்குக. (7 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** அபிக்ஞான சகுந்தலத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, சகுந்தலை பாத்திரம் எவ்விதம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதனை விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** 1990 களுக்குப் பின்னரான ஈழத்துத் தமிழ் அரங்கு பரீட்சார்த்த அரங்க முயற்சிகளின் விளைபயனாக விருத்தி பெற்று வந்துள்ளது என்பதனை அக்கால சமூக, அரசியல், சூழலமைவு, அரங்குகளின் உள்ளடக்கம், அவ்வரங்குகளின் நெறியாள்கை முறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கட்டியக்காரன்

(ii) மகிடிக் கூத்து

(iii) சொக்கரி

(iv) பீஜிங் ஒபேறா

(v) மாதவியின் பதினொரு வகை ஆடல் $(5 \times 3 = 15$ புள்ளிகள்)

பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும்
பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து,
எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி II
## பிரிவு A

01.

i. **வில்லியம் சேக்ஸ்பியரது கிங்லியர் நாடகத்தின் பிரதான மோதுகை யாது?**

உண்மைக்கும் போஇலிக்குமிடையிலான போராட்டமே இங்கு பிரதான மோதுகையாகிறது. அதாவது லியருக்கும் பெண்பிள்ளைகளுக்கும் ( கொனேறிஸ், றீகன் ) சென்ரர் பிரபுவுக்கும் மகளான எம்மண்டுக்குமிடையில் ஏற்படும் முரண்பாடுகள்

(03 புள்ளிகள்)

ii. **கிங்லியர் பாத்திரம் பெருங்காட்சிப் பண்புகளுடன் வெளிப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக.**

- கிங்கிலியர் நாடகத்தில் லியர் மன்னர் மேடையில் அசையும் செயல்நிலைகள், அவரது உரையாடல்கள், அணிந்திருக்கும் வேட உடை போன்றவற்றுக்கூடாக பெருங்காட்சிப் பண்பு வெளிப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு விளக்க வேண்டும்.
  உதாரணமாக
  கிங்கிலியர் ஆரம்பத்தில் பரிவாரங்களுடன் அரண்மனை வருதல்.
  அரச அங்கி அணிந்து காணப்படல்.
  இந்தப் பிரமையில் கிழிந்த உடையுடன் தோன்றுதல்.
  பாசறையின் கூடாரத்தில் சிகிச்சை பெறல்.
  மேடையில் தோன்றும் போது பின்னணி இசை வாசிக்கப்படல்.

- லியர் நாடக இறுதியில் கோடில்யாவின் இறந்த உடலை ஏந்தியவாறு தோன்றுதல்.

  போன்றவற்றை எடுத்துக்காட்டுவது எதிர்பார்க்கப்படுகின்றது.

(05 புள்ளிகள்)

iii. **பொதுமையான மனித உணர்வுகள் கிங்லியர் நாடகத்தினூடாக வெளிக்கிளம்பும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.**

- மனிதர்ளிடத்தில் காணப்படும் ஏமாற்றுதல், நம்பிக்கைத் துரோகம், போலிகளைக் கண்டு ஏமாறுதல் போன்ற பொதுமையான மனித உணர்வுகள் சிங்கிலியர் நாடகப் பாத்திரங்களுக்கூடாக வெளிப்படும் விதங்களை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி விளக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது.

| | |
|---|---|
| உதாரணம் காட்டியிருப்பின் | 03 புள்ளிகள் |
| மனித உணர்வுகளை எடுத்துக்காட்டி இருப்பின் | 04 புள்ளிகள் |

(07 புள்ளிகள்)

**02.**

i. **இராவணேசன் நாடகத்தின் கரு, மோடி, பாத்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.**

**கரு**

தோல்வி நிச்சயம் என்று தெரிந்ததும், தன்மானத்திற்காகப் போர் சௌய்து இலங்கையின் வீழ்ச்சி ஏற்படும் தன்னிகரில்லாத நிலை

(இது சார்ந்து விடை எழுதியிருப்பின் கவனத்தில் கொள்க.)

மோடி

யதார்த்தமற்ற மோடியுற்ற மோடி

(இது சார்ந்து விடை எழுதியிருப்பின் கவனத்திற் கொள்க.)

பாத்திரங்கள்

இராவணேசன், மண்டோதரி, இந்திராஜித், கும்பகர்ணன், இராமன், இலக்குவனன், அங்கதன், படை வீரன்.

(05 புள்ளிகள்)

ii. **இராவணன், மண்டோதரி ஆகிய பாத்திரங்களுக்கு இடையேயான மோதுகை செயல்நிலையில் வெளிப்படும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக.**

- இந்நாடகத்தில் இராவணன் தன்மானத்தினை இழக்க விரும்பாத பாத்திரமாகவும் மண்டோதரி தாய்மைகளின் பிரதிநிதியாக போரின் இழப்புக்களை விரும்பாத பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளமையால் இவ்விரு பாத்திரங்களுக்கு இடையேயும் மோதுகை செயல் நிலைகள் வெளிப்படுகின்றன.

  உதாரணம்:

  இராவணன் போருக்குச் செல்லும் சந்தர்ப்பம், இராவணன் இந்திரஜித்தை போருக்கு அனுப்பும் சந்தர்ப்பம் இது போன்ற சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பின் புள்ளிகளை வழங்கலாம்.

(05 புள்ளிகள்)

iii. **இராவணேசன் நாடகத்தில் இந்திரஜித் பாத்திரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள முறை பற்றி விளக்குக.**

- இராவணேசன் நாடகத்தில் இந்திரஜித் பாத்திரத்தின் வரவு தொடக்கம் இறப்பு வரையான காட்சிகள் ஊடாக இப்பாத்திரம் வளர்த்தெடுக்கப்படும் முறைமையினை இராவணேசன் நாடக பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது

  உதாரணமாக

| | | |
|---|---|---|
| இந்திரஜித் வரவு | – | வீரம், வேகம், இளமைத் துடிப்பு |
| தந்தையுடன் உரையாடல் | – | தெளிவு, புத்திக்கூர்மை |
| தந்தைக்காக போர் செல்லல் | – | பாசம் |
| போரில் தோற்கடிக்கப்படுதல் | – | சூழ்ச்சியை அறிதல் |
| மீண்டும் சினம் கொண்டு போர் செய்தல், இறத்தல் | – | தன்னம்பிக்கை |

இவை போன்ற விடயங்களை எடுத்துக்காட்டுவது எதிர்பார்க்கப்படுகின்றது.

(07 புள்ளிகள்)

**03.**

i. **ஈழத்தில் தோன்றிய பா நாடகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.**

1. கோடை
2. புதியதொரு வீடு
3. முற்றிற்று

(03 புள்ளிகள்)

ii. **கோடை நாடகப் பாத்திரச் சித்தரிப்பில் கிராமிய சமூகப் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் துல்லியமாக வெளிப்படும் விதத்தை விளக்குக.**

- ஆட்சி ஃ அரசியல், பண்பாட்டு, பொருளாதார மாற்றங்கள் கிராமிய சமூக பண்பாட்டிலும் தாக்கம் செலுத்துவதோடு மனிதர்களின் நடத்தையிலும் சிந்தனையிலும் மாற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

**பஞ்சையர்**

இக்காலத்தில் உலகளாவிய ரீதியில் பரவலடைந்த பொதுவுடமைச் சிந்தனை கிராமத்தை நோக்கி நகர்ந்துள்ளதை பஞ்சையர் எனும் பாத்திரச் சித்திரிப்பில் காணலாம். புதிய சிந்தனைப் போக்கு மாந்தர்களை நேசித்தல் எனும் பண்புகளை இவரிடம் காணமுடிவதோடு ஆங்கிலேயர் ஆட்சியினால் கோயில்கள் பொலிவிழந்து போனதன் நிலை முதல் வருடத்து திருவெம்பாவை, பணத்தினை மாணிக்கம் குடும்பத்திற்கு கொடுக்க முடியாத நிலையில் இப் பாத்திர வெளிப்பாடு அமைகின்றது.

**மாணிக்கம்**

சமூகத்தில் கலைகளுக்கு ஏற்பட்ட நிலை மாணிக்கம் எனும் பாத்திரச் சித்திரிப்பில் வெளிப்படுத்தப்படுகின்றது. கலைகளுக்கான வாய்ப்பு மதிப்பு குறைந்த போது தான் நேசிக்கும் நாதஸ்வரக் கலையை வளர்க்கவும், பேணவும் முயலுகின்றார். நிராகரிப்புக்கு இடையிலும் சோமுவிற்கு கலையை முழுமையாக கற்றுக் கொடுக்க விளைகின்றார்.

**செல்லம்**

சமூகத்தில் ஆங்கிலக் கல்வியின் மோகமும், அரச உத்தியோக விருப்பும் பரவலடைந்திருந்ததையும் அதன் தாக்கத்தையும் செல்லம் எனும் பாத்திரச் சித்திரிப்பில் காணமுடிகின்றது. கணேசுவிற்கு குடும்பத் தொழிலை மறைப்பித்து அரச உத்தியோகத்திற்குரிய ஒருவனாக மாற்ற நினைப்பதும் மகள் கமலிக்கு அரச உத்தியோகத்தர் என்பதற்காக முருகுப்புவை திருமணம் செய்து வைக்க விரும்புவதும் கொண்டு கவரப்படுகின்றது. ஒரு சாதாரண தாயாக நாதஸ்வரத் தொழிலால் வருமானமற்றிருக்கும் நிலையில், இவ்வாறு எண்ணுகின்றார். சிங்கப்பூஃர் பென்சனியர் கொடுத்த யப்பான் சிலுக் சேவையை பஞ்சையர் செல்லத்திடம் கொடுப்பதும் அதைக் கமலி .. கட்டிப்பார்க்கட்டும் என மொழிவதும் பண்பாட்டு மாறுதலின் கூறாக மிளிர்கின்றது.

(05 புள்ளிகள்)

**கணேசு**

இப்பாத்திரச் சித்தரிப்பில் பண்பாட்டு மாறுதலுக்கும், இடையில் ஊடாடுவதாக சித்தரிக்கப்படுகின்றது. வீட்டில் கலை மறுதவிக்கப்படுகின்ற போது வெளியே மரக்கொத்தியின் சத்தத்தை கட்டை மணியன் குடித்துவிட்டு போடும் மெட்டுக்களை இரசக்கிறான் இக்காலத்து புதிய சிந்தனைப் போக்கு இவனிடமும் வெளிப்படுகின்றது தான் தூக்கு வரும் நாய்க்குட்டிக்கு சாதி முறை கொடுப்பதோ என்கின்றான்.
உதாரணம் அரிய பெரிய பிரிவு முறைகள் நிறைய உடைய பிரிய மனிசர்கள் நாய்களுக்கும் அந்த நடப்பைக் கொடுக்கிறதோ..? இக்காலத்தில் கல்வி முறையில் ஆங்கில மன்னர் பற்றி வரலாறு இணைக்கப்பட்டிருந்தால் கணேசு பாடப்பரப்பொன்றை வாசிப்பதன் ஊடாக புலப்படுகிறது.

**விதானையார்**

காலத்த்திற்கேற்ப பாரம்பரிய ரீதியான நடைமுறைகள், கட்டுப்பாடுகள் கிராமிய பழக்கங்கங்களில் எங்கனம் தளர்வடைகின்றது என்பதையும் இருதலை நிலையில் நிற்கும் போக்கையும் இப்பாத்திரச் சித்தரிப்பு ஊடாகக் காணமுடிகின்றது. மாணிக்கத்தின் வீட்டில் கோப்பி குடிக்க நினைப்பதும் அதே கணம் பஞ்சையர் அவர்பகளிடம் இட்லி வாங்கி உண்டதைக் கருத்தில் கொண்டு உண்டலிலும் பார்க்க பருகல் உறைப்பில்லை என்கின்றார்.
உதாரணம்: கால மாற்றத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு ஆங்கில அதிகாரியை வரவேற்க செய்யும் ஒழுங்குகள் இக்காலத்தில் ஏற்பட்ட மனித நடத்தையின் மாறுதலையும் புலப்படுத்துகின்றது.

**காசி**

முன்னர் கொட்டகைகளில் நடந்த கூத்துக்கள் அருகி பட்டணத்துக்குக் கொட்டகைகளுக்கு நாடிச் செல்லும் நிலையினையும் கிராமத்தில் அன்றாடம் இரசித்த மாணிக்கத்தின் நாதஸ்வர இசையை நகரமண்டபத்திற்கு சென்று கேட்பதற்கு ஆவல்கொள்வதும் அங்கு தன்னை அங்கு அனுமதிப்பார்களா? என தயங்குவதும் ஆகிய செயற்பாடுகள், காசி என்னும் பாத்திரச் சித்தரிப்பு ஊடாக கிராமிய சமூகப் பண்பாட்டில் கலைகளுக்கு ஏற்பட்ட மாற்றத்தைப் புலப்படுத்துகின்றது.
உதாரணம்: கால மாற்றத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு ஆங்கில அதிகாரியை வரவேற்க செய்யும் ஒழுங்குகள் இக்காலத்தில் ஏற்பட்ட மனித நடத்தையின் மாறுதலையும் புலப்படுத்துகின்றது.

iii. **‘கோடை எழுத்துருவை மையப்படுத்தி அக்கால ஏகாதிபத்திய ஆட்சி முறை மக்களின் மனப்பாங்கில் ஏற்படுத்திய பாதிப்பினை விளக்குக.**

ஏகாதிபத்திய ஆட்சியினால் குறிப்பாக 1937 களில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பினை கோடைகாலத்தோடு உருவகிக்கின்றார். நாடகாசிரியர் வாழ்வியல் முறையில் ஏற்படும் மாற்றங்கள் மனிதர்களின் மனப்பாங்கில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதைப் புலப்படுத்துகின்றார்.

- அந்நியர் ஆட்சி ஆங்கிலக்கல்வியின் தேவையும், அதனூடாக கிடைக்கும் வேலைவாய்பையும் கொண்டுவர அது எங்கனம் அவர்களது சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டுவருகின்றது என்பதை செல்வத்தின் ஊடாக கண்டு கொள்ள முடிகின்றது. கணேசுக்கு தொழிலை மறைப்பித்து பேனை பிடித்து பெரிதெழுதும் கிளாக்கராக்கா வேண்டும் என்ற மனப்பாங்கும் முருகப்பு அரச உத்தியோகத்தில் இருப்பதால் தனது மகளிற்கு திருமணம் செய்து கொடுக்க நினைப்பதையும் அதற்காக முருகப்பை தன் வீட்டிற்கு வலிந்து அழைக்கும் மனப்பாங்கை காணலாம்.

- பொதுவுடமை சார் நிலையில் நின்று ஏகாதிபத்திய ஆட்சியின் மாற்றங்கள் கண்டு வருந்தும் மனப்பாங்கை சோழு, பஙஞ்சையர், மாணிக்கம் எனும் மாந்தர்களிடம் காணலாம்.
  உதாரணம்: சிற்பி இருந்து செதுக்கி முடித்த சிலை பொற்புடைத்து கெட்டுப் பொலிவு சிதைந்தழிந்து மொட்டை உருவாய் முடமாய் நிற்கின்றது.
- ஏகாபத்திய அரச ஆட்சிக்கு சார்பாக நடந்து கொண்டவர்களின் மனப்பாங்கு தங்கள் பதவியில் நிலைத்திருக்க வேண்டிய செயற்பாடுகளில் முனைபவர்களாக உள்ளனர் புதிதாக வரும் அரசாங்க அதிபரை வரவேற்க செய்ய ஏற்பாடுகளும் தங்கள் விருப்புக்களை விடுத்து மேலைத்தேய வாத்திய வரவேற்பை ஒழுங்கமைப்பதும் அவர்தம் மனப்பாங்கை வெளிப்படுத்துகின்றது.
- நாதஸ்வர இசையை அறியாதவர் சபையில் நிகழ்த்துவதற்கு விரும்பாதபோக்கு கலைஞர்களிடம் காணப்பட்டாலும், அந்நியர் ஆட்சியினால் வருமானம் பெறும் வழிகள் அரிதான நிலையில் வரும் வாய்ப்பை விருப்பின்றி ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு ஏற்படுகின்றது.
  உதாரணம்: ஆனியிலோ, அடியிலோ வந்தடைகின்ற சேவகத்தை மோடி செய்து கண்ணால் முளிசிக் கலைத்துவிட்டால் சாப்பிட வேண்டாமோ?
- கணேசு தன் கலையிலிருந்து விடுபடமுடியாமலும் தாயின் விருப்பிற்கேற்ப ஆங்கிலக்கல்வியை கற்றுக் கொள்ளாத மனநிலையிலும் இடர்படும் நிலை ஆட்சிமாற்றத்தினால் இளையவர்களிடம் மாறுபட்ட மனப்போக்கை உருவாக்கின்றது.
- அந்நியர் ஆட்சியினால் விளைந்த கோடையினால் மக்களின் மனப்பாங்கில் ஒரு நம்பிக்கை எழுவை-தயும் காணலாம் இது இடரின்போது எழும் நேர் மனப்பாங்கின் விளைவு
  உதாரணம்: என்றோ இருந்துபார் மாணிக்கம் நின்றந்த கோயில் நிமிர்ந்து..
- பஞ்சையரிடம் காணப்படும் புதிய மனப்பாங்கு சாதியம், சமூகக் கட்டுப்பாடுகளுக்கு எதிரான சிந்தனைகள் ஏகாதிபத்திய ஆட்சியின் விளைவின் ஒரு கூறாக அமைகின்றது. ஏனெனில் விடுதலைச் சிந்தனையின் கல்விச் சிந்தனையின் வெளிப்பாடாகவே இது எழுகின்றது.

(07 புள்ளிகள்)

## பிரிவு B

**04. அபிக்ஞான சகுந்தலத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, சகுந்தலை பாத்திரம் எவ்விதம் படிப்படியாக வளர்ந்தெடுக்கப்படுகிறது என்பதை விளக்குக.**

- நாடகம் மோதுகைகளுக்கூடாக வளர்ந்தெடுக்கபடுவதும் சாகுந்தலம் நாடகத்திலும் பல மோதுகைச் சந்தரப்பங்கள் காணப்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டுவது எதிர்பார்க்கப்படுகின்றது.
  உதாரணமாக துருவாசகர் சகுந்தலையுடன் முரண்படுதல், துசியந்தன் சகுந்தலையுடன் முரண்படுதல் போன்ற மோதுகைச் சந்தரப்பங்களை எடுத்துக்காட்டியிருப்பின் புள்ளிகளை வழங்கலாம்.
- அபிக்ஞான சாகுந்தலம் நாடகத்தில் சகுந்தலை பாத்திரம் தோன்றுவது தொடக்கம் நாடக இறுதி யில் துசியந்தனுடன் இணைவது வரையான கட்டங்களுக்கூடாக இப்பாத்திரம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும் முறைமையினை இந் நாடகப்பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது.
  உதாரணமாக
  ஆச்சிரமத்தில் செடிகொடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல் – இயற்கையைப் பேணுவது, இரசிப்பது.
  துசியந்தனைக் காணுதல் – காதல்
  துசியந்தன் ஏற்க மறுத்தல் – பொறுமை, நிதானம்
  நாடக இறுதியில் துசியந்தனைக்காணல் – தவறை உணர்தல்
  இவை போன்ற விடயங்களைக் எடுத்துக்காட்டுவது எதிர்பார்க்கப்படுகின்றது. (15 புள்ளிகள்)

**05. 1990களுக்குப் பின்னரான ஈழத்து தமிழ் அரங்கு பரீட்சார்த்த அரங்க முயற்சிகளின் வளைபயனாக விருத்திபெற்று வந்துள்ளது என்பதனை அக்கால சமூக, அரசியல், சூழலமைவு, அரங்குளின் உள்ளடக்கம், அவ்வரங்குகளின் நெறியாள்கை முறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

- 1990 களுக்குப்பின்னரான ஈழத் தமிழ் அரங்கு பரீட்சார்த்த அரங்க முயற்சிகளின் வினைபயனாக விருத்தி பெற்று வந்துள்ளது என்பதனை, அவ்வரங்குகளின் நெறியாள்கை முறைகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு விளக்குக.

- ஈழத்தமிழ் அரங்கில் பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ள வாய்ப்பாக இருந்த பின்னணிகள்
  - யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் பாடநெறி வளர்ச்சி
  - கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் பாடநெறியை ஆரம்பித்தமை
  - அரங்குசார் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் தோற்றமும் வளர்ச்சியும்.

- கலாநிதி க.சிதம்பரநாதன் அவர்கள் ஊசலல ழக யுளயை நாடகப் பயணம் மூலம் பெற்ற அனுபவத்தை ஈழத் தமிழ் அரங்கில் பிரயோகித்து முன்னெடுத்த முயற்சிகள்.

  குறிப்பாக – உயிர்த்த மனிதர் கூத்து நாடகம்

  ஆற்றுகை ஃ நாடகப் படிமுறையாக்க முயற்சிகள் – எழுத்துரு உருவான முறைமை உள்ளடக்கம்

  தமிழர் பிரச்சினை – வரலாறாகவும், அரசியல் ரீதியாகவும் நோக்கப்பட்டமை

  ஆற்றுகை வடிவம் – ஆடல், பாடல் எனக் காவியப் பாணியிலான அறிக்கை முறை

  நடிகர்களின் ஆற்றலை வெளிக்கொண்டுவருவதற்கான நெறியாள்கை முயற்சி

  ஆற்றுகை வெளியை பலவாறாகப் பயன்படுத்தியமை

  பொய்க்கால் நாடகம் பற்றிய விளக்கம்

  இதே பின்னணியில் தமிழர்களின் அரசியற் கோரிக்கைகளும், ஆயுதப் போராட்டங்களும் வலுப்பெற்ற நிலையில் அவ்விடயங்களை உள்ளடக்கங்களாகக் கொண்ட நாடகமுயற்சிகள் சந்தரப்பவசமாக பரிசோதனை முயற்சிகளாக மேற்கிளம்பின.

  பல்கலைக்கழக கற்கையை மேற்கொண்டவர்களின் பரீட்சைத் தேவைக்கான ஆற்றுகைகள் பரீட்சார்த்த அரங்குகளாயின

  உதாரணங்கள் – ஜெயசங்கரின் – நவீன பஸ்மாசுரன், தீசுமந்தோர்

  ரதிதரனின் – மலநீக்கம், அண்டவெளி, பொங்கொலி நகர்

  ஜெயரஞ்சனியின் – மூளாத்தீ, காடர்

  நவதர்சினியின் – பாழடைந்த கோயிலின் பரம்பொருள்

  தேவானந்தின் – அக்கினிப்பெருமூச்சு, எல்லாம் சரிவரும்

  போர்க்காலச் சூழலால் அகதிமுகாமில் வாழ்ந்த மக்களின் பிரச்சினைகள் நோக்கியபார்வையில் ஆற்றுகை செய்யப்பட்ட தெருவெளி ஆற்றுகைகளின் பரீட்சார்த்தப் பண்புகள் பற்றிக் குறிப்பிடுதல்.

  விவாத அரங்கு, கண்ணுக்குப் புலனாகாத அரங்கு, உள்ளச்சிகிச்சை அரங்கு, தளைநீக்க அரங்கு, பட்டறை அரங்கு என நடைபெற்ற பரீட்சார்த்தஅரங்க முயற்றிசிகள் தொடர்பாக மாணவர்கள் குறிப்பிடுவது எதிர்பார்க்கப்படுகிறது.

  அரங்க நிறுவனங்களான – அரங்க செயற்பாட்டுக்குழு, அரங்க ஆய்வு கூடம், செயல்திறன் அரங்க இயக்கம், திருமறைக் கலாமன்றம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட அரங்கு சார்ந்த புதுமுயற்சிகளை மட்டும் மாணவர்கள் இனங்கண்டு விபரிப்பதைப் பொருத்தமானதாகக் கருதி புள்ளியிடவேண்டும்.

(05 புள்ளிகள்)

**06. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக**

i. **கட்டியக்காரன்**

- பாரம்பரிய கூத்தில் முக்கிய பங்கு வகிப்பவன் .
- கூத்தைக் கட்டியாழ்பவன்.
- நாடகக் கதையினைக் கூறுபவன்.
- பாத்திர வருகையை அறிவித்து சபையோரை ஆயத்தப்படுத்துபவன்
- நகைச்சுவையை ஏற்படுத்துபவன்
- கையில் பிரம்புடன் காலில் சதங்கை அணிந்து மார்பில் பூநூல் அணிந்து வருபவன்
- காட்சிப் பின்புலத்தை எடுத்துக் கூறுபவன்

இவற்றை விளக்கிக் கூறல் (05 புள்ளிகள்)

ii. **மகிடிக் கூத்தி**

- மகிடி என்பது மந்திர தந்திர விளையாட்டுக்களைக் குறிக்கும் .
- மகிடிக் கூத்துக்கள் மூதூர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பிரதேசங்களில் ஆடப்படுகின்றன.
- மட்டக்களப்பில் 3 வகை மகிடிக் கூத்துக்கள் காணப்படுகின்றன.
- இருந்தவருக்கும் வந்தவருக்கும் நடக்கும் போட்டியே மகிடிக்கூத்தின் கருவாக இருஇக்கின்றது. மட்டக்களப்பு ம.கிடிக் கூத்தில் பிராமணர் முஸ்லிம், பிராமணர் – கத்தோலிக்கக் போட்டியும் இடம் பெறுகின்றன.
- மகிடியில் வரும் பாத்திரங்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப தாமாகவே தமக்குள் கற்பனை செய்து ம.க்களுடன் பார்ப்போருடனும் உரையாடிக் கொள்வர்.
- பிரசமான பகிடிகளும் மகிழ்ச்சியையும் பெரு.ம் சிரிப்பையும் விளைவிக்கும் உரையாடல்களும் நிகழ்வுகளும் இவற்றில் உண்டு.

இவற்றை விளக்குதல் வேண்டும் (05 புள்ளிகள்)

iii. **கொக்கரி**

- சிங்களப் பாரம்பரிய நாட்டார் ஆற்றுகை வடிவம்.

- சிங்கள வருடப்பிறப்பை ஒட்டியதாக நிகழ்தப்பெறும்.

- பத்தினித் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது.

- ஐதிகக் கதையை அடிப்படையாகக் கொண்டது.

- குருகாமி, சொக்கரி, வைத்தியர், பச்சி, மீறா போன்ற பாத்திரங்கள் இடம்பெறும்.

- வயல்வெளி களத்து மேட்டில் நிகழ்த்தப்படும்.

- பாத்திரங்களை பொத்தேகுரு அறிமுகம் செய்வார்.

(05 புள்ளிகள்)

iv. **பீஜிங் ஒபேறா**

- சீனாவின் செந்நெறிப்படுத்தப்பட்ட அரங்க வடிவங்களுள் ஒன்று.

- பாடல், ஆடல், உரையாடல், சேர்க்கஸ், ஊமம் ஆகிய அம்சங்களை த.னித்துவமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றது.

- ஆரம்பகாலத்தில் பாரம்பரிய வரலாற்றுக்கதைகள் நிகழ்த்தப்பட்டு பின்னர் போர் சம்பந்தமாகவும் சமூகப் பிரச்சினை சம்மந்தமாகவும் சீன புரட்சி சம்பந்தமாகவும் எடுத்துக் கூறின.

- ஒபேறா நிகழ்த்துகையில் 4 வகை மாதிரிப்பத்திரங்கள் பிரதான பங்கு வகித்தன.
  செங் – Sheng (ஆண்)
  டான் – Dan (பெண்)
  ஜிங் – Jig (வீரன்)
  சௌ – Chou (கோமாளி)

- ஒபேறாவில் பெண் வேடந்தாங்கி புகழ் பெற்றவராக நடிகராக மீலாங்பாங் குறிப்பிடப்படுகிறார்.

- சீனா ஒபேறா நாடகத்தின் மூலகர்த்தாவாக விளங்கியவர் பிரபல எழுத்தாளர் லீ பூஷாகே என்பவர் ஆவார்.

(05 புள்ளிகள்)

v. **மாதவியின் பதினொரு வகை ஆடல்**

- மாதவி ஆடிய 11 ஆடல்கள் பற்றி சலப்பதிகாரம் கூறுகின்றது.

- மாதவி ஆடிய 11 ஆடல்களாவன
  கொடு கொட்டி, பாண்டரங்கம், தல்லியம், மல், துடி, குடை, குடை, பேடி, மரக்கால், பாவை, கடையம்.

- இவற்றுள் கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல், குடை, குடம் என்பன நின்றாடும் கூத்துக்களாகும்.

- ஏனையவை வீழ்ந்து ஆடும் கூத்துக்களாகும்.

  இவை பற்றி விளக்குதல் வேண்டும். (05 புள்ளிகள்)